Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 18 } ஈரோடு, 30-12-1944 மார்கழி-மீ 16உ { மலர் 12

தேவர்களின் காமவிகாரம்

(மணி திரட்டியது)

நமது இந்திய நாட்டின் ஜனத்தொகை 33 கோடியென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்து சமய தேவர்களின் ஜனத்தொகை 33 கோடி என்று புராணங்களும் இதிகாசங்களும் சொல்லுகின்றன. இந்த 33 கோடி தேவர்களின் வரலாறுகளைப் புராண இதிகாசங்கள் எழுதவில்லை. ஆனால் தேவர்கள் எனப்படுவோரில் முக்கியமான ஒரு சிலரைப் பற்றி மாத்திரம் புராணங்களிலும், இதிகாசங்களிலும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களின் யோக்கியதையைப் பற்றி ஆராய்வதற்காகவே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

முதலில் சூரியன் என்னும் தேவனைப் பற்றியாராய்வோம். இந்தச் சூரியன் அந்தகவசுவெனிம்சன் என்பவனுடைய மகளைப் புணர்ந்த சரித்திரம் புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவளுடைய பெயர் ஆனர்த்தை என்பது. சூரியன் இவள் மீது காமவிகாரங்கொண்டு புணர்ந்தான் என்றால் சூரியனுடைய யோக்கியதை எப்படிப்பட்டது என்பதைப் பாருங்கள்! இரண்டாவதாகச் சந்திரன் என்னும் தேவனுடைய யோக்கியதையைப் பார்த்தால் அவன் தன் குருவாகிய பிரகஸ்பதி அல்லது வியாழன் என்பவனுடைய மனைவி தாரை என்பவளைப் புணர்ந்து புதன் என்னும் ஒரு பிள்ளையையும் பெறும்படிச் செய்துவிட்டான். இக்கதையைத் 'தாராசசாங்கம்' என்னும் நாடகத்தில் நடத்திக் காட்டப்படுவதால் இங்கு விபரமாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சந்திரனால் கற்பழிக்கப்பட்ட தாரையின் கணவனும் இனி தேவர்களுக்கெல்லாம் குரு என்னும் பெரிய உத்தியோகம் படைத்தவனுமாகிய வியாழன் அல்லது பிரகஸ்பதி என்பவனுடைய யோக்கியதையைப் பார்ப்போம். இந்த தேவ குருவுக்கு உதத்தியர் என்னும் தமையன் ஒருவர் உண்டு. அவருடைய மனைவி மமதை என்பவள். இந்த மமதை என்பவள் கருப்பமுற்றிருந்த சமயத்தில் ஒரு நாள் பிரகஸ்பதி அவளைப் பார்த்துவிட்டார். உடனே அவருக்குக் காம விகாரம் உண்டாய்விட்டது. அவர் தன் தமையன் மனைவியாயிற்றே என்றும் பாராமல், கருப்பமாயிருக்கிறாளே என்றும் கவனியாமல் மிருகங்கள் கூட செய்யாத மிலேச்சத்தனமாக மமதையருகில் சென்று தனது காம விகாரத்தைத் தெரிவித்து தன்னைக் கூடும்படி கேட்டுக்கொண்டார். அதைக் கேட்ட மமதை எனக்குப் பிள்ளையில்லாவிட்டால் உன்னைக் கூடி பிள்ளை பெற்றுக்கொள்ள சாத்திரம் சம்மதிக்கிறது, ஆனால், உன் அண்ணனைக்கூடி எனக்கு இப்போது கர்ப்பம் உண்டாயிருக்கிறது. ஆகையால் நான் உன் கருத்துக்கு இணங்கமாட்டேன் என்று பதில் சொன்னாளாம்! ஆனால் காமவிகாரங்கொண்ட தேவகுருவா இவளைச் சம்மதிப்பவர்? அவர் உடனே அவள்மேல் விழுந்து பலாத்காரப்புணர்ச்சி செய்தாராம்! அந்தோ! கொடுமை! கொடுமை! தேவர்களின் குருவே இப்படிச்செய்தால் இவருடைய சிஷ்ய தேவர்கள் என்னதான் செய்ய மாட்டார்கள்? இனி, அக்கினிபகவான் என்னும் தேவனுடைய யோக்கியதையைக் கவனிப்போம். அக்கினி ஒரு நாள் யமலோகத்துக்குப் போனானாம். அங்கே யமனுடைய மனைவி சாமளை என்பவள், வீட்டில் தனிமையாயிருந்தாளாம். அவளைக் கண்ட அக்கினிதேவன் காமவிகாரங்கொண்டு அவள் அருகில் சென்று தனது காம விகாரத்தை அவளுக்குத் தெரிவித்து தன்னைச் சேரும்படி வேண்டினானாம். சாமளை, அக்கினியைப் பார்த்து யமன் உன்னுடைய சிநேகிதன் அல்லவா? உன் சிநேகிதன் மனைவியாகிய என்னை நீ கற்பழிக்க விரும்பலாமா என்று கேட்டாளாம். அக்கினிக்குக் காமப்பித்து உண்டாய்விட்டதால், அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் விருப்பத்தை நிறைவேற்றி என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி அவள் கால்களில் விழுந்து கெஞ்சினானாம்! உடனே அவள் அவன் விருப்பத்திற்குச் சம்மதிக்க இருவரும் கூடி சுகித்தார்களாம்! இந்தச் சமயத்தில் யமன் வீட்டுக்குள் வரவும் சாமளை பயந்து அக்கினியை விழுங்கி வயிற்றில் வைத்துக்கொண்டாளாம்! இன்னும் இக்கதை நீளமாகப்போகிறது. முக்கியமான பாகத்தைச் சொல்லிவிட்டோமாகையால் இதனோடு நிறுத்திக்கொள்வோம்.

இனி, அக்கினி தேவனால் கற்பழிக்கப்பட்ட சாமளையினுடைய கணவனான யமன் என்னும் தேவனுடைய யோக்கியதையை ஆராய்வோம். இந்த நமன் என்னும் எமன் டிண்டிலை என்பவருடைய மனைவி சாயை என்பவளைக் கண்டு மோகித்துக் காமவிகாரங்கொண்டு அவளைச் சேர்ந்து கற்பழித்துவிட்ட செய்தி புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் தேவர்களுக்கெல்லாம் அரசனாகிய இந்திரன் யோக்கியதை எல்லோருக்கும் தெரிந்ததே. அவன் கௌதமர் என்பவருடைய மனைவி அகலிகை என்பவளை வஞ்சகமாகப் புணர்ந்து கற்பழித்துவிட்டான். இம்மட்டோ! தேவர்களுக்கும் அப்பாற்பட்ட பிரம்மா தன் மகள் பத்மை என்பவள் மீது காமவிகாரங்கொண்டு அவளைப் புணர்ந்த கதையும், பிரம்மாவின் தந்தையான விஷ்ணு சலந்தரன் என்னும் அசுரனுடைய மனைவிமேல் காமவிகாரங்கொண்டு அவளை வஞ்சகமாகக் கூடி இன்புற்ற கதையும், சிவன் தாருகவன ரிஷி பத்தினிகளைக் கற்பழிக்கும் பொருட்டு நிர்வாணமான கோலத்தோடு ரிஷி பத்தினிகளிடம் சென்ற கதையும், புராணங்களிலும், இதிகாசங்களிலும் மிக விரிவாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதனால் தேவர்கள் என்று சொல்லப்படுவோரின் யோக்கியதை, தமையன் மனைவியைப் பலாத்காரமாகப் புணர்வதும், குரு பத்தினிக்குப் புத்திரதானம் செய்வதும், சிநேகிதன் மனைவியை வஞ்சகமாகப் புணர்வதும், பிறர் மனைவியை இச்சித்து அணைவதும் தான் என்று புராணங்களிலிருந்தும், இதிகாசங்களிலிருந்தும் தெளிவாகத் தெரிய வருகிறது. வாசகர்களே! இவ்வளவு யோக்கியதையுடைய தேவர்கள் இந்து சமயத்தில் இருக்கும் போது

இந்து சமயம் எவ்விதமாக மதிக்கப்படும் என்பதை யோசித்துப் பாருங்கள். காம விகாரங்கொண்டு திரியும் இத்தேவர்கள் சரித்திரங்களடங்கிய புராணங்களையும், இதிகாசங்களையும் படிப்பதனாலும் கேட்பதனாலும் மக்களுக்கு ஆத்திக புத்தி உண்டாகுமா? கடவுள் பக்தி ஏற்படுமா? மோட்சம் கிடைக்குமா? அல்லது சன்மார்க்க புத்தியாவது உண்டாகுமா? இந்த ஆபாசம் நிறைந்த சாமிகளின் கதைகளைப் படித்தால் அறிவு விளக்கமுறுமா? தேசத்திற்கு நல்ல பெயர்தான் கிடைக்குமா? யோசித்துப் பாருங்கள். மிஸ் மேயோ போன்ற மேனாட்டுப் பெண்கள் இந்தியாவைப்பற்றியும், இந்து சமயத்தைப் பற்றியும் இழிவாக எழுதினார்கள் என்று முதலைக்கண்ணீர் விடும் சிகாமணிகள் இக்கதைகளையும் மோட்ச சம்பந்தமானதென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்களா? இவ்வித ஆபாசக் கதைகள் நிறைந்த புராணங்களைக் காப்பாற்ற ஆத்திகச் சங்கங்களும், வைதீகக் கூட்டங்களும் இருக்க வேண்டுமா? இந்துக்களே, உலகத்தாரே இக்கதைகளையும் புராணங்களையும் தேவர்களையும் ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

இன்னும் இக்கதைகளை மென்மேலும் ஆராய்ந்தால் தேவர்கள் என்று சொல்லப்படுவதே கட்டுக்கதைகள் என்று நன்கு விளங்கும். எப்படி என்றால், பல நூற்றாண்டுகளுக்கு முன்னே இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்திருந்தார்கள் என்னும் உண்மையைச் சரித்திரக்காரர்களே எழுதியிருக்கிறார்கள். அக்காலத்தில் அறிவு வளர்ச்சியுறாத அவர்கள் கிரகங்களையும், பஞ்சபூதங்களையும் தெய்வங்களென்றும், தேவர்களென்றும் முட்டாள்தனமாக நம்பி அவைகளை வணங்கி வந்தனர். உதாரணமாக சூரியன் ஒரு தேவன், சந்திரன் ஒரு தேவன், வியாழன் ஒரு தேவன் என்று இவ்வாறு சூரியன், சந்திரன், வியாழன் முதலியவைகளைத் தேவர்களாகவும், இடி மின்னல்களை உண்டாக்குகிற ஒரு தேவன் இருக்கிறான் என்றும், அவனுக்கு இந்திரன் என்று பெயர் என்றும் வானத்தில் காணப்படும் சூரிய சந்திர கிரகங்களையும், நட்சத்திரங்களையும் தேவர்களென்றும் நம்பி அவர்களுக்குப் பெண்டாட்டி பிள்ளைகளைக் கற்பித்துவிட்டதோடு அக்காலத்தில் ஆரியர்களுக்குள் இருந்த அடுத்தான் மனைவியைப் புணர்வது முதலிய காம விகாரங்களையும் இந்தக் கிரகங்களுக்குக் கற்பித்துக் கதை எழுதி வைத்துவிட்டார்கள். அவ்விதமே அக்கினி, வருணன், வாயு முதலிய பஞ்சபூதங்களையும் தேவர்கள் என்றும் சொல்லி அவர்களுக்கும் மனைவி மக்கள் காம விகாரங்களைக் கற்பித்து எழுதிவிட்டார்கள். வாசகர்களே! இவ்வாறு பஞ்சபூதங்களையும் கிரகங்களையும் அறியாமையினால் தேவர்கள் என்று எத்தனையோ காலத்துக்கு முன் ஒரு பைத்தியக்காரன் எழுதி வைத்து விட்டானானால் அந்தப் புளுகுகளையெல்லாம் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நம்பிக்கொண்டு இவ்வாபாசக் கட்டுக் கதைகளைப் படித்துக்கொண்டிருந்தால் அவனைப் போல சர்வ முட்டாள் எவனாவது இருப்பானா என்று கேட்கிறோம்.

இவ்விதக் காம விகாரமுள்ள கட்டுக் கதைகளைப் படிப்பதைக் காட்டிலும் அராபிக்கதை, விக்கிரமாதித்தன் கதை, பஞ்ச தந்திரக் கதை, தெனாலி ராமன் கதைகளைப் படிப்போமானால் சற்று அறிவு வளரும். ஆனால் நமது நாட்டில் குருட்டு நம்பிக்கை வேரூன்றியிருப்பதால் இந்த ஆபாசம் நிறைந்த புராணக் கதைகளைத் தெய்வீகச் சம்பந்தமானதென்றும், மோட்சத்துக்கும் ஆத்மார்த்தத்திற்கும் கடவுளுக்கும், மதத்திற்கும் சம்பந்தமுடையவைகளென்றும் ஜனங்கள் நினைத்துக்கொண்டிருப்பது மூடத்தனமல்லவா? இவ்வித ஆபாசக் கதைகள் வேறு எந்த சமயத்திலாவது இருக்கிறதா? என்று சற்று எண்ணிப் பாருங்கள்.

திராவிட மாணவர் மன்றம்
திருச்சி

திருச்சி தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் விசேஷக் கூட்டம் மன்ற செயலாளர் தோழர் டி. சி. எஸ். மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தலைவரும் அவரைத் தொடர்ந்து மாணவர்கள் சண்முகம், கேசவன் முதலியவர்களும் "காலடிச்சுவட்டிலே" என்னும் பொருள்பற்றிப் பேசியபின்னர் தோழர் டி. சி. எஸ். மணி, மாணவர் மாநாட்டைக் கூட்டவேண்டிய அவசியம் குறித்து சில வார்த்தைகள் சொல்லிய பின் மாநாட்டிற்கு வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது. தோழர்கள் எஸ். ஸைபத் இஸ்மயில் (முதல் வகுப்பு) வரவேற்புக்கழகத் தலைவராகவும், டி.சி.எஸ். மணி காரியதரிசியாகவும், நாராயணசாமி (முதல் வகுப்பு) பொருளாளராகவும், திருவரங்கம் சுப்பையன் பொன்மலை சிவஞானம் உதவி செயலாளராகவும், மற்றும் கீழ்க் கண்டவர்கள் கமிட்டி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்கள் டி. ஆர். மகாதேவன், தியாகராஜன், பஞ்சாபிகேசன், நடராஜன், தண்டபாணி, திருவேங்கடம், சண்முக சுந்தரம், சண்முகம் மற்றும் பலர். மாநாட்டை வரும் பிப்ரவரி இரண்டாம் வாரம் நடத்துவது என்றும், மாநாட்டைத் திறக்கப் பெரியார் அவர்களையும், கொடியேற்ற குடந்தை தவமணி இராசனையும், தலைமை வகிக்க சென்னை பச்சையப்பன் கல்லூரி தோழர் பி. ஜனார்த்தனம் அவர்களையும் கேட்டுக் கொள்ளுவது என்றும், தற்கால நிலைமையை ஒட்டியும், நாட்டின் நலனைக் கருதியும், கழகத்தின் பெயரை திராவிட மாணவர் மன்றம் என மாற்றிக்கொள்வது என்றும், கூட்டும் மாணவர் மாநாட்டை, திராவிட மாணவர் இயக்கச் செயலாளர் தவமணி கேட்டுக்கொண்ட படி மண்டல மாநாடாகக் கூட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பின் உதவிச் செயலாளர் வந்தனம் கூற கூட்டம் கலைந்தது.

மகளிர் இல்லத்தில் புதிய ஆஸ்டல்

மாதம் 10 ரூபாயில் திட்டம்

மகளிர் இல்லத்தில் இப்பொழுது இரண்டு வகையான ஆஸ்டல்கள் உண்டு. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மீ 1-க்கு 25—0—0 கட்டணத்தில் ஒன்றும், மற்றொன்று 7 வயதுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகட்கு மீ 1-க்கு 15—0—0 கட்டணத்தில் ஒன்றுமாக நடந்து வருகிறது.

இவைகள் இருக்க, பண வசதி குறைந்தவர்களுக்கு சௌகரியமாக இருக்கும் பொருட்டு மீ 1-க்கு 10—0—0 திட்டத்தில் ஒரு ஆஸ்டல் முறையை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறோம். சாப்பாடு, படிப்பு, உடை முதலிய யாவும் இதிலடங்கும். ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை படிப்பு உண்டு. மூன்று, நான்கு, ஐந்து வகுப்புக்கு வருகிற பிள்ளைகளின் விண்ணப்பம் முதலில் கவனிக்கப்படும். இதில் சேருகிற பிள்ளைகளின் புத்திசாலித்தனத்துக்கும் குடும்பத்தின் நிலைமைக்கும் தக்கபடி உபகாரப் பணமும் கிடைக்கக்கூடும்.

எந்தவிதம் பார்த்தாலும் இக்காலில் உணவு உடை படிப்பு எல்லாம் 10 ரூபாய்க்குள் அடங்காதென்பது யாவரும் அறிந்த விஷயம். என்றாலும் பெண்களின் படிப்பை வளர்க்கும் நோக்கத்துடன் இந்த ஏற்பாட்டைச் செய்கிறோம். இந்த வகையில் 20 பிள்ளைகள் தாம் இப்பொழுது சேர்த்துக்கொள்ளப் பெறுவர். மற்ற விபரங்கட்கு எழுதித் தெரிந்து கொள்க.

படிப்பைத் தவிர சமையல், கைத்தொழில், பயிர்த்தொழில்களிலும் பயிற்சி கொடுக்கப்படும்.

சொ. முருகப்பா,
அதிபர், மகளிர் இல்லம்,
அமராவதிபுதூர்.

சேலம் ஏற்காடு, திராவிடர் கழகத் தோழர் ஜி. ஏ. சாமியால் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1. நன்கொடையளிக்கப் பட்டது.

வடாற்காடு மாவட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சி

(வேலூரான்)

வேலூரைத் தலைநகராகக் கொண்ட வடாற்காடு ஜில்லாவில் திராவிடர் நிலையை நினைக்குந்தோறும் இந்த ஜில்லா வாசி, திராவிடர் கழக விசுவாசி என்ற முறையில் உள்ளபடியே நான் வெட்கமடைகிறேன்.

ஜஸ்டிஸ்கட்சி வலிவிழந்து, நாடி இழந்து, பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களுடைய தயவை எதிர்நோக்கி யிருந்தபோழ்து முதன்முதலாக, பெரியார் வகுத்தவழி நின்று ஜில்லா தெ. இ. ந. உ. சங்கம் ஏற்படுத்தப்பட்டது வடாற்காட்டில்! தமிழர் தன்மானப்போரின் பலநூறு இளைஞர்களை சிறைக்கனுப்பியது வடாற்காடு. திராவிடர் பெருந்தகை பெரியார் அவர்களுக்கு 1001 ரூபாய் காணிக்கையளித்த சில ஜில்லாக்களில் ஒன்று வடாற்காடு! என்றுமே—தேர்தல் காலத்திலும்—திராவிடர் கோட்டையாக விளங்கும் திருப்பத்தூரை தன்னகத்தே கொண்டது வடாற்காடு "சந்திரோதயம்" முதன் முதலாக நடிக்கப்பெற்றது வடாற்காட்டில்!! 1938ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மாநிலத்தமிழர் நான்காவது மாநாடு நடைபெற்றது வடாற்காட்டில்!!!

அத்தகைய புரட்சிமணம் வீசும் வடாற்காடு, இரண்டொரு ஆண்டுகளாக பின்னடைந்தே வந்துகொண்டிருப்பதானது, ஒவ்வொரு உண்மைத் திராவிடனுக்கும் வருத்தம் பயக்கக்கூடியதே. திராவிடர் கழகத்தில் (ஜஸ்டிஸ்கட்சியில்) ஆயிரம் அங்கத்தினர்கள்கூட சேர்க்கப்படாமலிருக்கிறதே என்றுதான் போன்றார் வருந்தும் வேளையில் இரண்டாண்டுகளாக பேச்சுமூச்சற்றிருந்த வ. ஆ. ஜில்லா ஜஸ்டிஸ் கமிட்டி விரைவில் கூட்டப்படப் போகிறதாம். ஆனால் அதன் உட்கருத்தென்ன?

"நாயினேகன்" மூலம் முளைக்கேறிய ஒரு பத்தாம்பசலித் தோழரும், பழைய பெருச்சாளியான தோழரொருவரும் அண்மையில் சென்னையில் பிப்ரவரி திங்களில் நடைபெற இருப்பதாக விளம்பரம் செய்யப்பட்டு வரும் 'தெ. இ. ந. உ. சங்க' மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் அனுப்பும் விஷயமாய் யோசிக்க, ஜில்லா ஜஸ்டிஸ் கமிட்டியைக் கூட்டவேண்டுமென்று தலைவர் தோழர் ஜி. சாமி நாயுடு பி. ஏ., பி. எல்., அவர்களைக் கேட்டிருக்கிறார்களென்பது தெரிந்தது. 'பார்ப்பனரல்லாத தலைவர்'களுடன் ஒற்றுமை குன்றியிருப்பது கண்டு ஜில்லா பிரமுகரின் ஒருசாரார்க்கு மிகமிக வருத்தமாம், மற்றொரு சாரார் பி. பி. [illegible]

மாணவர் எழுச்சி!

☆

என் சொல்வேன் அடடா! என் ஆவி பற்றி
எறிவரும் உணர்ச்சியை, நன் மகிழ்ச்சி வைத்தான்!
பொன்போன்ற காலத்தைப் பொன்னாய்ச் செய்யும்
புகழ்வாய்ந்த மாணவர்கள் என் இனத்தின்
நன்செய்யில் விளைந்திட்ட நற்பயிர்கள்
நாட்டுநிலை உணர்ந்திட்டார்! துடித்தெழுந்தார்!
கொல் துகளாய்ப் போம் இழிவை எனச்சூள் செய்தே
கூடிவிட்டார் ஒன்றாய்! நான் கண்டு விட்டேன்!

பொங்குகின்ற மகிழ்ச்சிக்கோர் எல்லை யில்லை!
பூரிப்பால் என்தோள்கள் உயர்ந்து விம்மும்!
எங்குளது பகை? எங்கே? என்றன் கண்கள்
எட்டியதொலைகடந்தும் எட்டிப் பார்க்கும்!
சிங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து விட்டால்
சிறுநரிகள் சூழ்ச்சிகளும் செய்தல் இல்லை!
இங்கிந்த நிலைகண்டேன் திராவி டத்தின்
எதிர்காலம் அதோ! அவர்கள் கையில் தானே!

புறமுதுகு காட்டாப்போர் மறவர் ஈன்ற
புதுமலர்கள் அதோபாரீர்! வாழ்த்துக் கூறீர்!
திறமில்லார் யாரோ? என் றதட்டும் அந்தச்
சேய்கள்முன் பகைவர்வாய் திறக்க வில்லை!
பிறநாட்டார் எம்மைப்'பேன் நாட்டார்' என்னும்
பெரும்பழிக்கு வகைதேடும் ஆரி யத்தை
அறவே இந் நாள்அதுவும் இன்றே பாய்ந்தே
அழித்திடுவோம்! ஆம்! இதிலே ஐய மில்லை!

செழுந்தேனை யொத்ததமிழ் உணர்ச்சி யாலே
திறல்பெற்றார் மாணவர்கள்! திராவி டத்தின்
முழுப்பொறுப்பும் அவர்ஏற்றுக் கொண்டார்! போரின்
முன்னணியை வன்மையுற அமைத்து விட்டார்!
எழில்வாய்ந்த பருவத்தார், தூய்மை மிக்கார்
எழுச்சிதனை யுற்றார்! இனி இந்த நாட்டில்
அழுந்தமிழர் துயர்தீர்வார்! அவரால் இன்பம்
அண்டிவிடும்! தண்டமிழ்த்தாய் சிறப்பாள் நன்றே!

'தமிழ் ஒளி' (விஜயரங்கன்) புதுவை.

'ஜரிகைத் தலைகளின் கட்சி'யை ஏற்படுத்தும் முயற்சியில் இரண்டறக் கலந்து விடுவதுதான் நல்லதென்று கருதுகின்றனராம்.

எது எவ்வாறிருந்தாலும், எவர் நினைப்பு எதுவேயாயினும், வடாற்காடு ஜில்லா தோழர்களுக்கு ஒன்றுகூற விரும்புகிறேன். செயற்கரிய செய்தார் தலைவர் பெரியார். அவர் தலைமையில் திராவிடநாடு பெறுதல் கூடும். நம்மையும் மனிதர்கள் என்று உலகத்தார் மதிக்க பெரியார் அவர்கள் தலைமையும், துணையும் தேவை; மிகவும் தேவை. நாட்டுப் பிரிவினைப் போருக்கு வடாற்காடு ஜில்லா ஆயிரமாயிரம் தோழர்களை [illegible] வேண்டாமா? சூழ்ச்சிக் கும்பலுடன் உறவாடுவது சரியா?

சென்ற கிழமை "குடி அரசி"லும், "ஜஸ்டிஸைட்"டிலும் வெளிவந்த தலையங்கங்களையும், பெரியார் அவர்கள் அறிக்கையையும் கண்ட பின்னுமா, தோழர்களே, உங்களுக்கு மான உணர்ச்சி இல்லை?, ரோஷமில்லை?, ஆத்திரமில்லை? 'அளவற்ற பொறுமை ஆண்மைக் கழகன்று' என்ற நல்லுரையை நீங்கள் அறியமாட்டீர்களா? 'தடித்த தோலர்கள்' என்று நம்மை, சென்னை, கோவை, தஞ்சை திருச்சி மாவட்டத் தோழர்கள் இகழ்ந்துபேச நாம் காத்திருப்பதா?

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

வேண்டுகோள்

செங்கலத் தோழர்களுக்கு,

திராவிடர் கழகத்திற்கு பெருவாரியான அங்கத்தினர்களைச் சேர்த்து வெள்ளிக்கோப்பையைப் பெறுவதற்கு ஒவ்வொரு ஜில்லாவும் ஒன்றோடொன்று போட்டி போட்டு முன்னேறிச் செல்லும் இந்த நேரத்திலே நீங்கள் 8-வது ஸ்தானத்தில் இருந்துகொண்டு வாளாவிருப்பது அவமானமல்லவா?

இந்தி எதிர்ப்பு காலத்திலே பல தோழர்களைச் சிறைக்கனுப்பி, முன்னணியில் நின்று வேலை செய்து பெரியார் அவர்களின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி, சுயமரியாதைக் கொள்கையில் ஆர்வமுடன் உழைக்கும் வீரர்கள் யார் என்று கேட்டால், இத்தூத்துக்குடி தோழர்களைத்தான் சொல்வேன் என்று நம் பெரியார் ராமசாமி அவர்கள் கூறுவதைக் கேட்ட உங்கள் காதால் கோழைகள் என்று கூறுவதைக் கேட்க விரும்புகிறீர்களா? இதைக் கேட்ட மற்ற ஜில்லாக்காரர்கள் தான் உங்களைப் பரிகசிக்கமாட்டார்களா? அதற்கு நாம் இடம் வைத்துக் கொள்ளலாமா? கூடாது என்றால் அதற்கான முயற்சி எடுக்க வேண்டாமா? சுமார் 80 ஆயிரம் மக்கள் வாழும் நம் நகரிலே குறைந்தது 8 ஆயிரம் அங்கத்தினர்களையாவது சேர்க்க முயற்சிக்கப்பட வேண்டாமா? எங்கே பார்க்கலாம் இன்னும் இரண்டு மாதங்களில் தஞ்சையைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு அந்த முதலிடத்தை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு வெள்ளிக்கும்பாவைப் பரிசாகப் பெறும் காட்சியை!

இங்ஙனம்,
கே. வி. கே. சாமி,
தூத்துக்குடி.

* *

அருப்புக்கோட்டைத் தோழர்களே,

சேலம் மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க எல்லாவிடங்களிலும் திராவிடர் கழகத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்து கழகங்களும் அமைத்துவருகிறார்கள். நம் நகரில் இதுவரை 200 உறுப்பினர்களே சேர்ந்திருக்கிறார்கள். குறைந்தது 500 உறுப்பினர்களாவது சேர்ந்த பின் தான் கழகம் அமைக்க வேண்டுமென்றிருப்பதால் 7-1-45 ஆம் தேதி கடைசி ஞாயிறன்று கழகமமைக்க ஏதுவாக ஆண், பெண் யாவரும் அத்தேதிக்குள் உறுப்பினர்களாகச் சேரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். நம் தாலுகாவிலுள்ள வெம்பூர் தோழர்களுக்கு சந்தா புத்தகங்கள் கொடுத்திருப்பதால் சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொள்ளவேண்டியது. நகரிலுள்ள தோழர்களான எஸ். எஸ். பழனிச்சாமி, எஸ். எஸ். கருப்பையா, மா. சிவசாமி, பெ. ரத்தினம், மு. கே. சுப்பிரமணியம், கே. சண்முகவேலு, சிவ. சண்முகசுந்தரம் ஆகியவர்களிடம் உறுப்பினராகப் பதிந்து கொள்ளலாம்.

பீ. பெரியசாமி,
அருப்புக்கோட்டை.

ரோஜா முத்தையா

எதிர்பாருங்கள்!

மாஜி மந்திரி திரு. ராமநாதன், டாக்டர் அம்பேத்கார் இவர்களுடைய படங்கள் விரைவில் வெளிவரும்.

திராவிடன் பதிப்பகம்,
133—லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)

* *

ஆரணி (வ. ஆ.) தோழர்களுக்கு,

'குடி அரசு'ம் 'திராவிடநாடு'ம் படிக்கும் தோழர்களே! உங்களில் இதுவரை எத்தனை பேரை அங்கத்தினராகச் சேர்த்தீர்கள்? எத்தனை பேர் சேர்ந்தீர்கள். நம் வெற்றி பெற்ற வீரத் தலைவர் பெரியார் அவர்கள், "திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கவேண்டும்; அங்கத்தினர்களாய்ச் சேருங்கள்" என்று முழங்குவதைக் கேட்டும் வீணே உறங்குகின்றீர்களே! இது தகுதியா? என் உறக்கம்? இவ்வார (24-12-44) தமிழுலகில் 'காணும்' விழித்தெழு தமிழா!" என்ற கட்டுரையைப் படித்துப்பார்! உறக்கத்தைத் தவிர்! உணர்ச்சி கொள்! வீரமுடன் எழு. இன்றே நான்கணா செலுத்தி உன்னை ஒரு அங்கத்தினராகப் பதிவு செய்துகொள். கட்டாயம் ஒவ்வொருவரும் ஒரு பத்து அங்கத்தினர்களைச் சேர்ப்பது என்ற முடிவுடன் எழுங்கள், திரண்டு வாருங்கள், பெருமிதமான அங்கத்தினர்களைச் சேருங்கள். ஆரணி உறக்கத்தினின்று எழுந்துவிட்டது என மெய்ப்பித்துக் காட்டுங்கள். எங்கே வாருங்கள் பார்க்கலாம்.

அங்கத்தினர்களைப் பதிவு செய்யுமிடங்கள்.

வே. திங்கள் அழகன் (வே. சோமசுந்தரம்), திராவிட இளைஞர் கழகம், ஆரணி. (வ. ஆ.)

கே. ஜம்புலிங்கம், கணேசர் கம்பெனி, ஆரணி. (வ. ஆ.)

* *

நெல்லைப்பாளையங்கோட்டைத் தோழர்களே!

22-12-44 வெள்ளிக்கிழமை நமது திராவிடர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இதற்குள் 200-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்துவிட்டார்கள்.

மேலும் இக்கிழமை முற்றும் உறுப்பினர் சேர்க்கும் கிழமையாகக்கொண்டு அலுவலகத்தார் உறுப்பினர் சேர்க்கும்படியும் பொது மக்கள் கழகத்தில் திரள் திரளாய்ச் சேரும்படியும் கோருகிறோம். நெல்லை மாவட்டம் மிகவும் பின்னணியில் இருக்கும் நிலைபோக்க முன்வாருங்கள்.

ஏ. வீ. முத்தையா, தலைவர்.

* *

தஞ்சைத் தோழர்களுக்கு,

நமது ஜில்லாவில் 5000 தோழர்களையாவது திராவிடர் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கவேண்டாமா? முந்துங்கள்!

எனவே தோழர்களே! உங்கள் பெயரைக் கீழ்க்காணுமிடங்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்:

1. தஞ்சைத் திராவிட வாலிபர் கழகம், கரந்தை.
2. ஸ்டாலின் சைக்கிள் கம்பெனி, வடக்கு வீதி, தஞ்சை.
3. யூசுப், வெற்றிலைபாக்குக் கடை, மணிக்கூண்டு.
4. பீ. ஜம்புலிங்க நாடார், மளிகை கீழவாசல், தஞ்சை.
5. 'குடி அரசு', 'திராவிடநாடு' பத்திரிக்கை விற்கும் வெற்றிலைபாக்குக் கடை, (ஸ்டேஷனுக்கருகில்)

என். எஸ். சண்முகவடிவேல்,
கரந்தை.

கோவை முதலாவது திராவிடர் மாநாடு

கோவையில் ஜனவரி மாதம் இறுதியில் நடைபெறும். மாநாட்டில் திவிர ஜனநாயகக் கட்சித் தலைவர் எம். என். ராய், பெரியார் ஈ. வெ. ராமசாமி, மாஜி மந்திரி எஸ். ராமநாதன் எம். ஏ., பி. எல்., புரட்சிக் கவி பாரதிதாசன், "திராவிட நாடு" ஆசிரியர் சி. என். அண்ணாதுரை, லிபரேட்டர் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி பார்-அட்-லா, இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) முதலியவர்கள் கலந்து கொள்ளுவார்கள். இடம், தேதி பின்னால் தெரிவிக்கப்படும்.

ஜெ. எஸ். கண்ணப்பர்,
வரவேற்புக் கழகத் தலைவர்.
எஸ். ஜீ. பாதம்,
செயலாளர்.

மாவட்டந்தோறும் மாணவத்தோழர்கள்

திராவிடநாட்டின் பற்பல மாவட்டங்களில் திராவிட மாணவர் பிரசாரக்குழுவினர் சென்று சொற்பொழிவாற்றி வருகின்றனர்.

திருநெல்வேலி

தோழர்கள் பி. ஜனார்த்தனம் பி. ஏ. எஸ். தவமணி இராசன் ஆகிய இருவரும் இம்மாவட்டச் சுற்றுப்பிரயாணத்தில் கலந்துகொண்டார்கள்.

22-12-44-ந் தேதி மாலை சிந்துபூந்துறையில் தோழர் எ. வி. முத்தையா தலைமையில் நடந்த பாளையங்கோட்டை திராவிடர் கழகத் தொடக்கவிழாவில் இரு மாணவர்களும் கலந்துகொண்டார்கள்.

23-12-44ந்தேதி மாலை 6-மணிக்கு கதிர்மணிக் கழகத்தின் சார்பில் மந்திரமூர்த்தி உயர்தரக் கல்லூரியில் தோழர் க. மு. பிரமநாயகம் பிள்ளை தலைமையில் மாணவத் தோழரிருவரும் "இளைஞர் எழுச்சி" பற்றி விரிவுரையாற்றினார்கள்.

25-12-44ந் தேதி ஆத்தக்குடி பாண்டியன் வாசகசாலையின் 5-வது ஆண்டு விழாவில் தோழர் எ. அய்யாசாமி தலைமையில் நம் மாணவத்தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

அன்றுமாலை 7-மணிக்கு ஆத்தக்குடி சிவன்கோவில்முன்பு திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் வி. எஸ். சண்முகம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் குடந்தை எஸ். தவமணி இராசன், பி. சனார்த்தனம். கே. அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

திருநெல்வேலி மாவட்டச் சுற்றுப் பிரயாணம் 30ந் தேதியுடன் முடிவுறுகிறது.

மதுரை

தோழர்கள் குடந்தை எஸ். தவமணி இராசன், தஞ்சை இரா. சந்தானம் ஆகியோர் 31-12-44 முதல் இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட திட்டப்படி சுற்றிச் செல்வார்கள்.

31- திண்டுக்கல்
1-1-45 கல்வார்பட்டி
2- சின்னாளப்பட்டி
3- வாடிப்பட்டி
4, 5- மதுரை.

மேலும் விபரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கெழுதுக.

சி. முத்திருளாண்டி,
தன்மதிப்பு இளைஞர் மன்றம்,
55-D, புட்டுத்தோப்பு வீதி, மதுரை.

திருச்சி

தோழர்கள் அ. மா. பெரியசாமி, இரத்தினவேல் [illegible], நன்மாறன் ஆகிய மூவரும் கீழ்க்கண்ட முறையில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

30-12-44 பெருகமணி
31- பட்டவாத்தலை
1-1-45 குளித்தலை
2- கரூர்
3- சிரங்கம்
4- மணச்சநல்லூர்
6- மேலகற்கண்டார் கோட்டை
7- பொன்மலை
8- திருச்சி
10- துறையூர்.

மேலும் சிறுகனூர், ஜெயங்கொண்டம் ஆகிய ஊர்களுக்குச் செல்லும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

இராமநாதபுரம்

புலவர் நா. மு. மாணிக்கம், தோழர் இரா. வில்லாளன் ஆகிய இருவரும் பின்வருமாறு சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள்.

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

போரின் கடுமை இனிதான்
அதிகரிக்கப் போகிறது

பெரும் போர்கள் இனிதான்
நடக்க விருக்கின்றன

செஞ்சிலுவைக்கு
அதிக வேலை இருக்கிறது

எனவே,
தயவு செய்து இதை எண்ணிப்பார்த்து

★

மே. த. கவர்னரின்
யுத்த நிதிக்கு
('செஞ்சிலுவை' என்ற பெயரால்) மீண்டும்
தாராளமாகப்
பணங் கொடுத்துதவுங்கள்

அறிவிப்பு

நமது "குடி அரசு" பத்திரிகைக்கு விற்பனை ஏஜண்டாக தவுட்டுப்பாளையம் தோழர் டி. பி. மூர்த்தி அவர்களை நியமனம் செய்திருக்கிறோம். வேலாயுதம்பாளையம், N. புகளூர், தவுட்டுப்பாளையம், வேலூர், புதுப்பாளையம், பாண்டமங்கலம் முதலிய இடங்களில் உள்ள மக்கள் அன்னாரிடம் பத்திரிகை பெற்றுக் கொள்ளவும்.

மானேஜர்.

நகைச்சுவை அரசருக்கு வேண்டுகோள்

விருத்தாசலம் திராவிடர் கழகத்திற்கு சொந்த இடம் தேவையை முன்னிட்டு நகைச்சுவை அரசர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஓர் "கிந்தனார் காலட்சேபம்" நடத்திக்கொடுக்க இசையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என ஒரு தீர்மானம் இவ்வூர் திராவிடர் கழகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

குடி அரசு

1944-ஆம் டிசம்பர் 30-உ

ஹிட்லரிசமும் ஆரியனிசமும்

உலகில் ஒவ்வொரு நாடும் இழந்த சுதந்திரத்தை, உரிமையை மீண்டும் பெறுவதற்காகவும், தம் தம் கலை, மொழி, நாகரிகம், பழக்கவழக்கம் ஆகியவைகளை பாதுகாக்கவும் போராடிக் கொண்டுவருகின்றன. நேசதேசங்களும் இவைகளுக்காகத்தான் பாடுபடுவதாகவும் சொல்லப்பட்டுவருகிறது. இவ்வாறு தாங்கள் இழந்த சுதந்திரத்தை—உரிமையைப் பெறுவதற்காகப் போராடும் நாடுகள் எத்தகையன என்பதையும் மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அவைகள் யாவும் சில ஆயிர மக்கள் முதல், 6 கோடி மக்கள் வரையுடையவைகளே. அந்நாடுகளின் நிலப்பரப்பும் நம்நாட்டு ஜில்லாக்கள், மாகாணங்களை ஒத்ததாகத்தானிருக்கும். இவைகள் யாவும் தம்தம் சுதந்திரங்களை கடந்த ஒருசில வருடங்களுக்குள்ளாகத்தான் இழந்திருக்கின்றன. இதற்குக் காரணம் ஹிட்லரிசம் (Hitlerism) எனப்படும் ஆரியனிச (Aryanism) வெறியாகும். இன்று விஞ்ஞான வளர்ச்சியடைந்திருப்பதினால், ஆரியனிசம் விஞ்ஞானத்தின் உதவி கொண்டு மற்ற நாடுகளின் சுதந்திரத்தைப் பறித்து ஆரியத்தை நிலைநிறுத்தப் பாடுபடுகிறது. ஆனால் இவ்விட்லரிசம் எனப்படும் ஆரியனிசத்தை ஐரோப்பாவிலிருந்தே, ஏன் உலகிலிருந்தே அழித்து ஒழிக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது; அதன் கொடுமையை எண்ணிப் பார்த்தவர்களால்.

இதே ஆரியனிசம்தான் இந்தியா என்று சொல்லப்படும் இவ்வுபகண்டத்திலிருந்து வருகிறது. இது பன்னெடுநாட்களாக இவ்வுபகண்ட மக்களை வாட்டிவதைத்து மக்களது சுதந்திரங்களையும் உரிமைகளையும் மிதித்து பகுத்தறிவற்ற விலங்காக ஆக்கிவைத்து வந்திருக்கிறது-வருகிறது. வேறு சுதந்திரமிழந்த— உரிமையிழந்த நாடுகள் போடும் கூக்குரல் கேட்கிறது உலகிற்கு; ஆனால் பன்னெடு நாட்களாக, அழுத்து தலைத்தாங்க மாட்டாமல் இவ்வுபகண்டத்தின் மக்கள் போடும் கூக்குரல், கதறும் கதறல் கேட்கிறதில்லை இவ்வுலகிற்கு. இதற்குக் காரணம் எதுவாகயிருக்க முடியும்?

ஹிட்லரிசத்தின்-ஆரியனிசத்தின் கொடுமையை உள்ளபடி, இவ்வுலகம் உணர்ந்திருக்குமானால், அவ்வாரியனிசம் உலகின் எப்பகுதியில் எவ்வுருவில் இருந்தாலும் அதன் தன்மை ஒரேவிதமாகத்தானிருக்குமென்பதை உணர்ந்திருக்கும். அவ்வாறு இல்லாமல் ஒரு இடத்தில் ஒரு விதமாகவும் மற்றொரு இடத்தில் வேறொரு விதமாகவும் இருக்கும் என்று உணர்ந்திருக்குமேயானால் அதன் நாணயத்தில் யாருக்கும் சந்தேகம் தோன்றாமலிருக்க முடியுமா என்று கேட்கிறோம்.

இவ்வுபகண்டத்தில் ஆரியனிசம் பரவுவதற்குமுன் மக்கள் எவ்வளவு உயர் நிலையில், சுயேச்சையாக இருந்தார்கள் என்பதை பழந்தமிழ் நூல்களின் வாயிலாகவும் புதைப்பொருள் ஆராய்ச்சிகளிலிருந்தும்தெரிந்துகொள்ளலாம். அவ்வாறு இருந்த மக்கள், தங்கள் பண்பிழந்து, கலையிழந்து, மொழியிழந்து, ஆரியத்திற்கு அடிமைகளாயிருந்து வருகின்றனர். இவ்வடிமைத்தனத்தை யுணர்ந்த ஒரு சிலர் தங்கள் மக்களைத் தட்டியெழுப்ப தன்மான உணர்ச்சியை யூட்ட பாடுபட்டார், அவ்வாறு பாடுபடுகிறவர்களை அந்நாளில் பலவித கொடுமைகளுக்குள்ளாக்கி, அவ்வுணர்ச்சி பரவமுடியாதபடி செய்துவந்திருக்கிறார்கள். இதற்கு ஆதாரங்கள் மலை மலையாக வேண்டுமானாலும் நம்மால் குவிக்க முடியும். இதற்குக் காரணம், அந்நாளில், மக்கள் போதுமான அறிவு பெறாதிருந்ததினாலும்; ஆட்சியிலிருந்தவர்களை ஆரியம் தனது வலையில் சிக்கவைத்திருந்ததினாலும், ஆரியத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவர்களையும், உணர்ச்சியூட்டி வந்தவர்களையும், ஆட்சி பலத்தால்— உதவியால், அத்தகைய கிளர்ச்சிகள் தலையெடுக்காமலும், உணர்ச்சிகள் பரவாமலும் தடுத்து வந்தார்கள் என்பதேயாகும்.

ஆனால், பிரிட்டிஷ் ஆட்சியின் பயனாக ஓரளவுக்கு பொது மக்கள் அறிவுபெற முடிந்ததினாலும், ஆட்சி ஆரிய ஆதிக்கத்திற்கு அடங்கியதாக இருந்தாலும், மற்ற மக்களுக்கும் சிறிதளவு ஆதிக்கமிருந்து வருவதினாலும், ஆரியம் முன் போல் தனது முழு சக்தியையும் காட்ட முடியவில்லை; கிளர்ச்சியை அடக்க முடியவில்லை; உணர்ச்சியைத் தடுக்க முடியவில்லை. எனினும், அது தன் விஷமத்தனத்தை பற்பல ரூபங்களில் காட்டிக் கொண்டுதான் வருகிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இன்று பொதுவாக இவ்வுபகண்டம் முழுவதும் விழிப்படைந்து விட்டதென்றே சொல்லலாம். ஆரியத்தின் கொடுமையை இவ்வுபகண்ட மக்கள் யாவரும் உணர்ந்து விட்டார்கள். ஆங்காங்கு பற்பல உருவங்களில், கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன; உணர்ச்சி காட்டப்பட்டு வருகின்றது. இதைக் கண்டு ஆரியனிசம் கலக்கமுற்றிருக்கிறது. எவ்வாறு இவைகளை எதிர்த்து அழிப்பது என்பதில் காலதேசவர்த்தமானத்திற்கேற்ப புதுப்புது வழிகளை கண்டுபிடிப்பதில் முனைந்திருக்கின்றது இந்நாட்டிலே ஆரியனிசம். இது போலவேதான் மேல்நாடுகளில், ஹிட்லரிசம் தனக்கெதிராக செய்யப்படும் கிளர்ச்சிகளையும், உணர்ச்சிகளையும் எதிர்த்து அழிக்க விஞ்ஞானத்தின் உதவிகொண்டு நாடோறும் புதுப்புது வழிகளை கண்டு பிடித்து வருகின்றது. ஆனால் இதற்கு சரியான பதில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன அந்நாடுகளில்; இந்நாட்டிலோ மக்கள் வாளாவிருக்கின்றனர்.

ஆகவே, இந்நாட்டின், ஆரியனிசத்தின் கொடுமையை உள்ளபடி உணரும் மக்களது நீங்காக் கடமை, மக்கள் விழிப்படைந்துள்ள இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கிளர்ச்சியைப் பலப்படுத்த வேண்டியதாகும். இது வரை, இவ்வுபகண்டத்தில் தோன்

திய எழுச்சிகளை அடக்கி ஒடுக்கியது போல் இப்பொழுதும் செய்து விடலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருக்கலாம் ஒரு சிலர், ஆனால், அவர்களுக்கு அம் மனக்கோட்டையைத் தகர்த்தெறிவோம் என்பதை எடுத்துக்காட்டவேண்டும்.

ஆரியனிசத்தை எதிர்த்து நடைபெறும் எழுச்சியில் சேரும் மக்களுக்கு எவ்வளவு தூரம் தொல்லைகள் கொடுக்கலாமோ, எவ்வளவு தூரம் அவர்களை இழிவுபடுத்தலாமோ, எவ்வளவு தூரம் செல்வாக்கற்றவர்களாகச் செய்ய முடியுமோ அவ்வளவுதூரம் ஆரியனிசம் முயன்று பார்க்கும். ஏனெனில், ஐரோப்பாவில் ஹிட்லரிசம், ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து ஒரு சில வருடங்கள்தானாகின்றன. இதற்குள் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த என்னனவோ முயற்சிகள் செய்து வருகையில், எழுச்சியை அடக்கப் பல வழிகளை வகுத்து வருகையில், இவ்வுபகண்டத்தில், ஆயிரக்கணக்கான வருடங்களாக, ஆதிக்கம்செலுத்தி, இனிது வாழ்ந்து வந்த ஆரியனிசம் இலேசில் விட்டுவிடுமோ! தன்னாலானமட்டும் முயன்று தான் பார்க்கும்.

ஐரோப்பாவில், ஹிட்லரிசத்தை ஒழிக்க எவ்வளவு முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன; எவ்வளவு பொருள்கள் செலவழிக்கப்படுகின்றன; எவ்வளவு உயிர்கள் பலியிடப்படுகின்றன என்பதை எண்ணிப்பாருங்கள். ஒரு சில வருடங்களாகவேரூன்றியிருக்கும் ஹிட்லரிசத்தை ஒழிக்க இவ்வளவு பெருமுயற்சிகள் எடுக்கப்படுகையில், பல ஆயிரம் வருடங்களாக ஆணிவேர் சல்லிவேர்கள் விட்டு வானளாவி உயரப்படர்ந்திருக்கும் ஆரிய விஷவிருட்சத்தை வெட்டி வீழ்த்துவதென்றால் எவ்வளவு பெருமுயற்சி செய்யவேண்டும், எடுத்துக் கொள்ள வேண்டும், எவ்வளவு மனஉறுதி வேண்டும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

ஏன் இவ்வாறு சொல்லுகிறோமென்றால், ஹிட்லரிசம் மக்களை அடிமைப்படுத்தி சுதந்திரமற்றவர்களாகச் செய்துவிடும் என்று அஞ்சப்படுகிறது. ஆனால் இந்நாட்டில் வேறு நாட்களுக்கு முன்னமே, அவ்வாறு செய்து விட்டது. பன்னெடுநாட்களுக்கு முன்னிருந்தே அந்நிலைமையிலிருக்கும்மக்களைவிடுவிப்பதற்காக முயலும் காரியத்தை ஆதரிக்கவேண்டியதல்லவா உண்மைப்படி, ஹிட்லரிசத்தின் கொடுமையிலிருந்து மக்களை விடுவிக்கப் பாடுபடுபவர்களின் கடமை! இன்று நாட்டிலே நடைபெறும் காரியங்களைப் பார்க்கையில் அவ்வாறு எண்ணுவதற்கில்லை. ஆரியத்தை எதிர்க்கிறவர்களுக்கும் அவர்களுக்குத் துணை நிற்கிறவர்களுக்கும் எவ்வளவு தூரம் தொல்லை கொடுக்கலாமோ அவ்வளவு தூரம் தொல்லை கொடுக்கப்பட்டு வருகிறது. விபீஷணர்களையும், சுக்ரீவன்களையும் அனுமார்களையும் புதிது புதிதாக உற்பத்தி செய்து வரப்படுகிறது. ஆரியனிசத்தால் அக்காலில் தோற்றுவிக்கப்பட்ட விபீஷணர்களையும், சுக்ரீவன்களையும், அனுமார்களையும், இன்று தன்மானமற்ற—சூடு சுரணையற்ற ஒரு சிலர் பூஜித்து வணங்கிவருவதுபோல் எதிர்காலத்தில் தங்களையும் வணங்குவார்கள் என்று இவர்கள்—இவ்விபீஷணர் முதலியோர்—ஒரு வேளைஎண்ணலாம். ஆனால், இவர்களுக்கு இவர்களது வாழ்நாளிலேயே, தங்களைப்போன்றவர்களை வணங்குவார்களா அல்லது இத்தகையவர்கள் சந்ததிகளே இனி இவ்வுபகண்டத்தில் மட்டிலுமல்ல உலகிலேயே தோன்றாமல் செய்துவிடுவார்களா என்பதை பகுத்தறிவு உலகம் உணர்த்திவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவ்வுபகண்டத்தில், அதிலும் குறிப்பாக, தென்னாட்டில் உள்ள மக்கள் யாவரும்ஓர் இனம்—ஓர் நாட்டு மக்கள்; எங்களுக்குள் வேற்றுமையில்லை—உயர்வு தாழ்வு இல்லை; நாங்கள் அடிமைப் படவுமாட்டோம்; அடிமை கொள்ளவுமாட்டோம் என்ற உணர்ச்சி ஒவ்வொருவர் உள்ளத்திலும் கொழுந்துவிட்டெரியும் இக்கோரத்தில், அதனை அணைக்க ஆரியனிசம், துரோகிகளைக் கொண்டும் பலவித உபாயங்களைக் கொண்டும் முயலுமானால், இதைக் கண்ணுறும் எவர் மனம்தான் துடிக்காமல் இருக்கும்.

ஆகவே, இவர்களது எண்ணத்தில் மண் வீழச்செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் இன்று நம் முன் உள்ளது; அதாவது, திராவிட இன உணர்ச்சியின்பாற்பட்டு ஓர் இனமென்று திரண்டு எழுந்து, உறுதி தளராத பெரியார் தலைமையில் நின்று போராடுவது தான்; இப்போராட்டத்தைத் துவக்குவதற்கு நாம் எல்லாம் ஒன்று திரளவேண்

திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

30-12-44ந் தேதி வரை 20755-அங்கத்தினர்கள் ரூ. 2227—10—0 சந்தா

டிசம்பர் மாதம் 30ந் தேதி வரை திராவிட கழகத்திற்கு (ஜஸ்டிஸ் கட்சிக்கு) தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

1. தஞ்சை	3975	9. வட ஆற்காடு	1071
2. திருச்சி	3178	10 மதுரை	941
3. சேலம்	3010	11. செங்கல்பட்டு	488
4. கோவை, உதகை.	1979	12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு)	111
5. இராமநாதபுரம்	1583	13. பெங்களூர்	100
6. சென்னை	1542	14. புதுக்கோட்டை	59
7. திருநெல்வேலி	1356	15. இலங்கை	13
8. தென் ஆற்காடு	1349		

ஆகமொத்த அங்கத்தினர்கள் 20755. சந்தா ரூ. 2227-10-0.

டும். அவ்வாறு ஒன்று திரளுவதற்குத் திராவிட கழகந்தான் இன்று ஏற்ற அமைப்பாக இருந்து வருகிறதென்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து திராவிடர் கழகத்தில் ஆயிரக்கணக்கில் அல்ல லட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் உறுப்பினர்களாகச் சேர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். திராவிடர் கழகம் எவ்வளவுக் கெவ்வளவு பலமடைகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நமது இலட்சியம் ஈடேறுவதற்குரிய காலத்தைக் குறுக்கியவர்களாவோம் என்பதோடு, இதனைப் பார்க்கும் நம் பெரியாரின் உள்ளமும் பூரித்து, இன்னும் பல திட்டங்களைத் தந்து பல வழிகள் வகுத்துத் தருவார்கள் என்பதில் ஐயமின்மை. இதற்காகத் திராவிடர் கிளர்ச்சி திக்கெட்டும் பரவும்படி செய்வதோடு திராவிட முழக்கம் எங்கும் முழங்கும்படி செய்ய வேண்டும். ஆரியனிசத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் உண்மையான ஆர்வமிருப்பவர்களும்; இந்நாட்டு மக்களை ஆரிய அடிமைத்தனையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்களும் முதலில் செய்யவேண்டியது திராவிடர் கழகத்திற்கு எவ்வளவு உறுப்பினர்களை சேர்க்க முடியுமோ அவ்வளவு பேர்களை சேர்ப்பதுடன், எதிரிகளின் சதிகளை, நடவடிக்கைகளை அழித்து ஒழிக்கவும் முன்வரவேண்டும். இதற்கு முன் மாதிரியாக, ஐரோப்பாவில் ஹிட்லரிசமாகிய ஆரியனிசத்தை அழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறதை நாம் கண்முன் பார்க்கிறோம். பார்த்தும் வாளாவிருக்கலாமா? எனவே, நாம் உறுதி தளராது ஊக்கத்தை கைவிடாமல் நிற்போமானால் வெற்றி நமதே.

மாணவர் முழக்கம்

எரிகிறது வீடு என்றால், உடனே அறிவுள்ள மக்களானால் ஆணும்பெண்ணும் இளைஞர்முதல் முதியோர் ஈறாக எவரும் தீயை அணைக்க முந்துவார்கள். அவரவர்கள் தம்தம் சக்திக்கேற்றளவு உதவுவார்கள். இதுமனித இயல்பு. இன்று உலகிலே ஒரு பெருந் தீ கொழுந்துவிட்டெரிகிறது. அது தான் உலகப் போர். இதை அணைக்க உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டு மக்களும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும், இளைஞனும் முதியோரும் பாடுபட்டு வருகின்றனர். அல்லும் பகலும் இதற்காக தங்கள் நலன்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு உழைத்துவருகின்றனர். ஒருவருக்கும் தங்கு தடையில்லை.

இதுபோலவே, இன்று நம் நாட்டில் எங்கு பார்த்தாலும் இன எழுச்சி காணப்படுகிறது. இனப் போர் முழக்கம் கேட்கிறது. தன்மான உணர்ச்சி பெற்றுவிட்டனர் மக்கள். சமுதாயத்தின் பெயராலும், பிறவியின் பெயராலும், ஜாதியின் பெயராலும் தங்களை இழிவுபடுத்தி அழுத்தி வைத்திருப்பதை மக்கள் உணர்ந்துவிட்டார்கள். ஆரியத் தீயானது எரிந்து கொண்டிருக்கிறது திராவிட நாட்டில். இதை கண்ணுறும் எவர்தான் வாளாயிருக்க முடியும். அதிலும் அறிவு விளக்கம்பெறும் மக்கள் வாளாவிருப்பார்களா?

எனவே, மாணவத் தோழர்கள் கிளம்பி யிருக்கின்றனர் இத் தீயை அணைக்க. சென்ற கோடைகால விடுமுறையில் கிளம்பியது போலவே இந்த கிருஸ்த்மஸ் விடுமுறையிலும் கிளம்பி திக்குவிஜயம் செய்து வருகின்றனர் திராவிட மாணவத் தோழர்கள். இவர்களது ஆர்வத்தை—ஊக்கத்தைக் கண்டு நாம் மகிழ்வதோடு திராவிடநாடும் மகிழும் என்றே கருதுகின்றோம். இவர்களது பிரசாரத்தால், குருட்டு நம்பிக்கையில் ஆழ்ந்துகிடக்கிறவர்களும், ஆரியத்திற்கு அடிமையாயிருந்து வருகிறவர்களும் விழிப்படைந்திருப்பார்கள் என்றே நம்புகின்றோம். இவ்வாறு இவர்கள் விழிப்படைந்ததற்கு அறிகுறியாகவும், மாணவத் தோழர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு-சேவைக்கு நன்றியறிதலாகவும் செய்யவேண்டியது யாதெனில், திராவிடர் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேருவது, திராவிடர் கழகங்களை நிறுவுவது தான். இதனைச் செய்வார்களானால், மேலும் மேலும், மாணவத் தோழர்களுக்கு இப்பணியிலிறங்குவதற்கு ஊக்கமளித்தவர்களாவார்கள் என்பதோடு ஆரிய ஆதிக்கத் தீயானது அதிகமாகப் பரவாமல் தடுத்தவர்களுமாவார்கள். இந்நாட்டார், நன்றியறிதல் உள்ளவர்கள் என்பதற்குப் பெயர்போனவர்களானதால், இக்கைம்மாறு செய்யத் தவறமாட்டார்கள் என்றே நம்புகின்றோம்.

பெரியார் தொண்டர் படை

மாபெரும் பொதுக் கூட்டம்

6-1-45 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு திருச்சி டவுன் ஹால் முன்பு பெரியார் தொண்டர் படையை எதிர்த்து தப்புப்பிரச்சாரம் செய்வதைக் கண்டிக்க, திருச்சி, தஞ்சை திராவிடர் கழக அமைப்பாளர் தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் தோழர் எ. கே. பாஷா, இன்னும் பல வெளியூர்த் தலைவர்கள் பேசுவார்கள். மாலை 4-30 மணிக்கு தொண்டர்படை ஊர்வலம் மணிக்கூண்டிலிருந்து புறப்படும். சேலம் மாநாட்டில் கலந்துகொண்ட உள்ளூர், வெளியூர் தோழர்கள் அனைவரும் ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் அவசியம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

திராவிட வாலிபர் கழகங்கள், திருச்சி, பொன்மலை, மலைக் கோட்டை, மார்க்கட், ஸ்ரீரங்கம், திருவானைக்காவல்.

திராவிடர் கழக மாநாடு

ஆரம்பக் கூட்டம்

இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழக முதலாவது மாநாடு நடத்த ஆலோசனைக் கூட்டம் 14-1-44-ம் தேதி மாலை 5 மணிக்கு காரைக்குடி திராவிடர் கழகத்தில் நடைபெறும். அவ்வமயம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திராவிடர் கழகங்களின் பொறுப்பினர்களும், ஆர்வமுள்ள தோழர்களும் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தோழர் எஸ். பி. மீனாட்சியம்மாள்

ருதூர் தோழர் ஆசிரியர் எஸ். பி. மீனாட்சியம்மாள் அவர்கள், கோபி, திராவிடர் கழகத்தாரின் அழைப்பிற்கிணங்கி, ஜனவரி மாதம் முழுவதும் கோபி தாலுகாவில் பிரசாரம் செய்வார்கள்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

24-12-44 காரைக்குடி
26- திருப்பத்தூர்
27- சிங்கம் புணரி
29- அருப்புக்கோட்டை

பின்னும் பிரசாரக் குழுவினர் காளையப்பூர், சிறுகுடி, கோனாப்பட்டு, கல்லூரணி, விருதுநகர் ஆகிய ஊர்களில் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

கோயமுத்தூர்

தோழர்கள் கா. அப்துல் கபார் (சேலம் கல்லூரி), கோவை. பி. முனுசாமி ஆகிய இருவரும் கீழ்க்கண்டபடி சுற்றிவருவார்கள்.

28-12-44 கோபிசெட்டி பாளையம்
29- சத்தியமங்கலம்
31- சென்னிமலை
1-1-45 ஈரோடு
2- திருப்பூர்
3- பொள்ளாச்சி.

மேலும் கூட்டம் நடத்தவிரும்புவோர் உடனே எழுதவும்.

எஸ். ஆர். சந்தானம்,
திராவிடர் கழக செயலாளர்,
எஸ். ஆர். மண்டி, ஈரோடு.

சேலம்

தோழர்கள் கி. தியாகராசன் (அண்ணாமலை நகர்), தஞ்சை எஸ். அறிவுடை நம்பி, கடலூர் இளவழகன், வீரமணி ஆகியோர் பின்கண்டவாறு பிரசாரம் செய்யச் செல்வார்கள்.

28-12-44 அம்மாப்பேட்டை
29- அரிசிப்பாளையம்
30- பொன்னமாப்பேட்டை
31- காலை ஏற்காடு
,, மாலை சேலம் மார்க்கெட்
1-1-45 சூலகண்டபுரம்
2- வளையாபட்டி
3- மேட்டூர்
4- ஓமலூர்
5, 6- தர்மபுரி
7- கிருஷ்ணகிரி
9- முதல் ராசிபுரம், நாமக்கல் தாலூகாக்கள்.

இதர ஊர்களில் கூட்டம் நடத்த விரும்பும் தோழர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு உடனே எழுதவும்.

எம். பி. நடராசன்,
செயலாளர், திராவிடர் கழகம்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

தென்னாற்காடு

தோழர்கள் டி. சி. எஸ். மணி, வெற்பரசன், நட்பரசன், திராவிட மணி ஆகியோர் சிதம்பரம், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி தாலூக்காக்களில் சென்று இதழில் குறிப்பிட்டவாறு செல்கிறார்கள்.

மற்றொரு பகுதியில் தோழர்கள் முத்துக்குமரன், திருமாறன், சாமிநாதன் ஆகியோர் கடலூர், விழுப்புரம், திண்டிவனம் தாலூகாக்களில் 29-12-44 முதல் [illegible]கிறார்கள்.

தலைவர் படங்கள்

பெரியார், அண்ணாதுரை, நெடுஞ்செழியன், டார்பிடோ ஜனார்த்தனம், அன்பழகன் இவர்களது படங்கள் தயாரிலிருக்கிறது. ஒன்றின் விலை 0—1—0. வேண்டுவோர் எழுதுக; தக்கவாபமுண்டு. எல்லா "குடி அரசு", "திராவிட நாடு", "திராவிட மணி" ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

திராவிடன் பதிப்பகம்,
133-லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)

29-12-44 கடலூர் O. T.
30- மஞ்சக்குப்பம்
31- குறிஞ்சிப்பாடி
1-1-45 சித்திரைசாவடி
2, 3- விழுப்புரம்
4- முதல் திண்டிவனம் தாலூக்கா.

ஆங்காங்குள்ள இயக்கத் தோழர்கள் பிரசாரக் குழுவினருடன் ஒத்துழைத்து குறிப்பிட்ட காலத்தில் தவறாது கூட்டத்தை நடத்த வேண்டுகிறோம். இதுவரை நடைபெற்ற கூட்டங்களின் செய்திகள் விரிவாகப் பின்னர் வரும்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

வ. ஆ. ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி

மேடி கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 7-1-45 ஞாயிற்றுக்கிழமையன்று வேலூர் முனிசிபல் ஆபீசுக் கருகில் உள்ள தியாசபிகல் லாட்ஜில் கூடும். இதையே அழைப்பாகக் கருதி எல்லா உறுப்பினர்களும் தவறாது வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஜி. சாமி நாயுடு, பி. ஏ., பி. எல்.,
தலைவர்,
வ. ஆ. ஜில்லா ஜஸ்டிஸ்
நிர்வாகக் கழகம்.

கட்டுரைப் போட்டி

மாணவ மாணவிகாள்!

கீழ்கண்ட தலைப்புகளில் ஏதாவது ஒன்றைப்பற்றி 100 வரிகளுக்கு மிகாமல் எழுதி கீழ்க்கண்ட முகவரிக்கு இரண்டனா தபால் தலைகளுடன் அனுப்பவும். கட்டுரைகள் புதிய கருத்துக்களாகவும் கூடியவரை தனித்தமிழாகவும் இருத்தல் நலம். கட்டுரைகள் தகுதிக்கேற்ப முதல், இரண்டு, மூன்று பரிசுகள் வழங்கப்படும். தமிழ் புலவர்களடங்கிய ஆய்வுக்குழு தீர்மானித்த கட்டுரைகளே பரிசுக்[illegible] கட்டுரைகளெல்லாம் 15-1-45க் தேதிக்குள் எமது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். அதன்பின் வருபவை கவனிக்கப்படமாட்டா.

கட்டுரைப்பொருள்:
1. "தமிழர் முன்னேற வழி"
2. "திராவிடநாட்டுப் பிரிவினை"

விலாசம்: அமைச்சர், திராவிட இளைஞர் கழகம், பீமநகர், திருச்சி.

பிறப்பு

நெல்லை, கீழவைப்பார்வாசியும், நமது "குடி அரசு" வாசகருமான தோழர் என். செல்லையா புலவர் மனைவியார் பாக்கியம் அம்மாள் 11-11-44-ல் பிரசவித்த ஆண் குழந்தைக்கு 10-12-44-ல் அந்தோனிசேவியர் யேசையா என பெயரிட்டு "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

அறிக்கை எண். 3.

திராவிடத் தலைவர்களின் உருவப்படங்கள்

விற்பனைக்குத் தயார்

எம்மிடம் திராவிடநாட்டுத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடையவும் மற்றும் பனகல் அரசர், சர் ஏ. டி. பன்னீர் செல்வம், தளபதி அண்ணாதுரை, பொன்னம்பலனார், சிற்றரசு, பாவலர், அர்ஜுனன், மாணவமணிகளான அன்பழகன், நெடுஞ்செழியன், ஜனார்த்தனம் மற்றும் உலகத்தலைவர்களான சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சியாங்கேஷேக், மே. த. மன்னர் தம்பதிகள் முதலிய படங்கள் விற்பனைக்குக் கிடைக்கும். எமது படங்களை விற்பனை செய்யும் பூரண உரிமையை வேலூர் திராவிடன் பதிப்பகத்தாருக்கு அளித்திருக்கிறோம். வேண்டுவோர் அன்னவருக்கு எழுதுக.

இங்ஙனம்,
K. K. நாயுடு,
[illegible], சேலம்.

ஏன் மாணவர்கள் வருகின்றனர்

(திண்டிவனம் கோ. ஆதிசேசவன்)

நாடெங்கும் சுற்றி, வீரவுரையாற்றி, பறைசாற்றி, பார்ப்பனீயத்தின் படுகுழியைக் காட்டி, அறியாமையை யோட்டி, பண்டைய புகழை நிலைநாட்ட வருகின்றனர். வரவேற்புத் தாருங்கள், வாகை சூடுங்கள்.

உத்தமத் திராவிடனே யோசித்துணர்ந்து நின்று பார்த்தாயா, பாடு யாருடையது, பயன் யாருடையது, உழைப்பு யாருடையது, பிழைப்பு யாருடையது, இந்தப் பஞ்சகாலத்தில் கொஞ்சமேனும் சஞ்சலமின்றி பஞ்சாங்கப் படைகள் அஞ்சாது வஞ்சகத்தால் பிழைக்கின்றனர் என்பதை உணர்ந்தாயா! கோயில்களிலே கோமகாங்கிகளின் கோலாகால லீலைகள் குறைந்ததா! கற்பூரம் எரியும் தட்டைக் கையிலேந்தி காணிக்கை வாங்குவது மறைந்ததா! ஊரிலே உழைப்பாளிகள் உணவுக்குத் திண்டாட, பாரிலே பாட்டாளிகள் பஞ்சத்தால் பரதவிக்க, ஆலயங்களிலே அக்கார வடிசல்கள் அழிந்ததா! மார்கழித் திங்கள் மடிநிறையப் பொங்கல் மாய்ந்ததா! பாமர மக்கள் இருக்க இடமின்றி படுக்கப் பாயின்றி பனியிலும் குளிரிலும் பதறியழ பாழும் சிலைகளுக்கு பள்ளியறையும் பஞ்சணை மெத்தையும் பதுங்கியதா! பக்கத்துடன் அங்கம் வெளிகாட்டி ஆடையின்றி அனாதைகள் அலைய, கருங்கற் சிலைகளுக்கு அணியும் அழகிய பட்டாடைகள் அடங்கினதா! பாலின்றி பாலர்கள் பதற பச்சைக் கல்லின் மீது பால் கொட்டும் பழக்கம் ஒழிந்ததா! ஆரியக் கங்காணிகளின் தொல்லை சுருங்கியதா! நன்கு யோசித்துப் பார் திராவிடத் தோழா! கையில் காசு இல்லாவிட்டாலும் காலால் நடந்து சென்றாவது காணிக்கை செலுத்துவேன் கடவுளுக்கு என்று பதைபடுகின்றாயே! என்னே உன் நிலை! அதற்காக எடுத்துரைக்கவே வருகின்றனர் நமது இளஞ் சிங்கங்கள்!

வட நாட்டினர் நம் நாட்டிலே சுடமாடித் திரிந்து இடம் பார்த்து உட்கார்ந்ததும் அவர்கட்கு வைத்ததை ஊட்டுகின்றாய்; ஆக்கத்தை அளிக்கின்றாய்; பின்னால் ஏக்கங்கொண்டு ஏங்குகின்றாய். பிறந்தவர் பேராலும், இறந்தவர் பேராலும் இல்வாழ்க்கையை யேற்றுக் கொள்பவர் பேராலும் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளை அவர்களிடம் அடிமையாக்கி, நிறைந்த வட்டிக்குக் குறைந்த பணம் பெற்று ஆரியனுக்கு ஆடையும், அரிசியும், அனாக்களும் அள்ளி அள்ளித் தந்து ஆதரிக்கின்றாய். உன் பொருளைக் கொள்ளை கொண்டு [illegible] யின் அதிபதியாகின்றான். ஆழ்ந்து யோசித்துப்பார் உன் அறியாமையை, அதற்காகவுரைக்கவே அண்டிவருகின்றனர்.

திராவிட நாட்டைத் தனி நாடாக்க, திராவிட மொழியைத் தனிமொழியாக்க, திராவிட அரசைத் தனி அரசாக்க, திராவிடப் போர் வீரர்களும், திராவிட வாணிபமும்; திராவிடக் கலையும் தனித்தோங்க, 'திராவிடநாடு திராவிடருக்கே' எனும் பேரொலியை முழக்குகின்றார்கள். செவிசாயுங்கள், புவியைப் பாருங்கள்; மேனாடுகளிலே வான முகிலிடையே வளைந்து வளைந்து செல்லுகின்றது வான ஊர்தி. ஆளில்லா விமானங்கள் சரமாரியைப் போல் பாய்ந்து வெடிகுண்டுகளை வீசுகின்றன. விஞ்ஞான விளைவால் வினையாற்றுகின்றன. குள்ள ஜப்பானியனின் திறமையைப் பாருங்கள். மக்களை திக்கு முக்காடச் செய்கின்றது. நம்மவர்கள் வாட்டி தட்டினாலும் வந்துவிடும் திருட்டி யென்று கரும்புள்ளி செம்புள்ளி குத்துகின்றனர். அங்கே ஐந்தடுக்கு மாளிகைகள் அலங்காரமாயிருக்கின்றன. இங்கு சிறு குடிசைக்கட்டினாலும் திருட்டிக் கழிக்கக் கட்டுவார்கள் பூசணிக்காயொன்றை. இன்னும் தெருவிலே உள்ள கல்லுக்குத் திருவிளையாடல் பாடுவதும் கோயிலிலுள்ள கல்லுக்குக் கோவிந்தா போடுவதும், சாணிக்கு சந்தன அபிஷேகமும் செய்வதுமாய் இருக்கின்றாயே. திராவிடத் தோழா! என்னே உன் அறியாமை! உன் நாடு சுதந்திரம் பெறுமா!

பகுத்தறிவு என்னும் சோதியிலே தோன்றிய பரிதியின் ஒளிகண்டு (பெரியார் ஈ. வெ. ரா.) புராண ஆபாசக் குப்பையிலே புதைந்து கிடக்கும் பள்ளிகளிலே இருந்து மின்னும் விண்மீன்கள் துள்ளிக் குதித்தோடி வந்து ஆரிய சாக்கடையில் ஆழ்ந்து கிடக்கும் அன்பர்களை அலசி எடுத்து அறிவுரை நிகழ்த்தி அறியாமையைப் போக்கவே வருகின்றனர். அன்று அவர்களை வந்து பாருங்கள், நின்று கேளுங்கள். உண்மையை உணருங்கள். "நானே திராவிடன்" என்று மார்தட்டுங்கள், "திராவிட நாடு திராவிடருக்கே" என வீரமுழக்கஞ் செய்யுங்கள்.

இனி மாண்பு மிக்க மாணவர்கள் மயங்கமாட்டார்கள்; கோடாரிக் காம்புகளைக் கொளுத்துவார்கள்; அடிவருடிகளைக் கண்டிப்பாய் அடக்குவார்கள்; பார்ப்பனீய பந்தர்களைப் படுகுழி தோண்டி புதைப்பார்கள் என்பதை உணருங்கள். "உண்மைத் திராவிடனாய் வாழுங்கள். இனப்பற்றுக் கொள்ளுங்கள். இன்பமாய் வாழுங்கள். நாட்டை நமதாக்குங்கள். பெரியாரைத் துணை கொள்ளுங்கள். வாழ்க திராவிடமென வாகை சூடுங்கள்!" என்றுரைக்கவே இன்று வருகின்றனர்!

குடந்தையில் "சந்திரோதய" நாடகம்

கும்பகோணம் டாக்டர் டி. எம். நாயர் ஞாபகார்த்தக் கட்டிடத்தில் தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில், 21-12-44-ந் தேதி நடந்த கூட்டத்தில் இந்நகரில் "சந்திரோதய" நாடகத்தை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. இதற்கென 31 பேர் கொண்ட வினைக் குழு ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டது. இக்குழுவிற்கு தலைவராகத் தோழர் வி. சின்னதம்பி அவர்களும், காரியதரிசிகளாகத் தோழர்கள் பி. ஆர். பொன்னுசாமி, கே. கே. நீலமேகம் ஆகியவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

சந்திரோதய நாடக சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளையும் செய்து முடிக்கிறதற்கு இக்கூட்டம் மேற்படி குழுவிற்கு முழு அதிகாரத்தையும் அளிக்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது.

அடுத்தபடியாக, டாக்டர் டி. எம். நாயர் ஞாபகார்த்தக் கட்டிடத்தை புதுப்பிக்க நன்கொடை வசூலிப்பதற்கு 9 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாத இறுதியில் வேலூரின் கண் ஜில்லாக் கமிட்டியின் கூட்டம் நடைபெறுமெனத் தெரிகிறது. அந்நல்ல சந்தர்ப்பத்தைத் திராவிடத் தோழர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளத் தவற மாட்டார்களென்று நம்புகிறேன்.

ஜில்லாக் கமிட்டியின் பெயர் 'திராவிடர் கழக'மென மாற்றப்படவும், பெரியார் தலைமையில் முழு நம்பிக்கை இருக்கிறதெனவும், சலகக்காரர் சென்னையில் செய்து வரும் அட்டூழியம் கண்டிக்கத்தக்கதெனவும், போலிக் கட்சியுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் இந்த ஜில்லாவைச் சேர்ந்த பிரமுகர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் அன்று நிறைவேற்றப்பட, திராவிடத் தோழர்களனைவரும் வேலூருக்குத் திரண்டுவர வேண்டுகிறேன். வீண் காலம் கடத்தல் தவறு. உலகம் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் போது திராவிடர் மட்டும் நீறணிந்தோராயும், மண்ணணிந்தோராயும் வாழ்வதேன்?

வடஆற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் அவர்கள் இது விஷயத்தில் எச்சரிக்கையுடன், இந்த ஜில்லாவின் நற்பெயர் பாதிக்கப்படாமலிருக்குமாறு கூட்டத்தை நடத்துவாரென்றும், கூட்டத்தைக் குறிக்கும் அறிவிப்பை ஜில்லா முழுவதும் உள்ள தோழர்களுக்குத் தெரிவிப்பாரென்றும் நம்புகிறேன்.

[illegible]

திராவிடக் கழகங்கள்

அம்மாப்பேட்டை, சேலம்

இவ்வூர் பனகால் திராவிடர் கழகத்தின் கூட்டம் தோழர் கே. கே. சாம்பலிங்கம் தலைமையில் 13-12-44 ஆந் தேதி கூடியது. திராவிடரும் நாகரிகமும் என்பது பற்றிப் பல தோழர்கள் பேசினார்கள். தோழர் எம். ஆர். சித்தையன் அவர்களின் தந்தையார் சமீபத்தில் இயற்கை எய்தியதை முன்னிட்டு அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

* *

இவ்வூர் (தியாகராயர்) திராவிட கழகத்தின் சார்பில் 4-12-44-ந் தேதி தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில் சேலம் தோழர் எம். ஆர். சித்தையன் அவர்களின் தந்தை இயற்கையெய்தினமை குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

தூத்துக்குடி

கிருஷ்ணராஜபுரத்தில் 26-11-44-ந் தேதி தூத்துக்குடி திராவிடர் கழக பிரசாரக் கமிட்டியின் சார்பாக தோழர் பி. எஸ். பி. கே. ஜெயராஜ் பாண்டியன் தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் பல தோழர்களால் சேலம் மாநாடும் நமது கடமையும் என்பது பற்றி சொற்பொழிவாற்றப்பட்டது.

* *

மாப்பிள்ளை ஊரணியில் 3-12-44-ந் தேதி தோழர் பி. எஸ். பி. கே. ஜெயராஜ் பாண்டியன் தலைமையில் திராவிடர் கழகம் திறந்து வைக்கப்பட்டது.

* *

10-12-44-ந் தேதி தோழர் தி. வயணப்பெருமாள் அவர்கள் தலைமையில் நடந்த சி. என். அண்ணாதுரை வாலிபர் சங்கக் கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் பெயர் "சி. என். அண்ணாதுரை திராவிடர் கழகம்" என்று மாற்றப்பட்டது. புதிய வருடத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

கோவில்பட்டி

இலுப்பையூரணியில் ஆதிதிராவிட வாலிபர் சங்கத்தின் ஆதரவில் தோழர் எம். கே. எஸ். சண்முகம் தலைமையில் 29-11-44-ந் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், திராவிடர் கழகத்தில் அங்கத்தினர் சேரவேண்டியதை வற்புறுத்தி பல தோழர்கள் பேசினர். 25 அங்கத்தினர்கள் உடன் சேர்க்கப்பட்டதுடன் மேற்கொண்டு 25 அங்கத்தினரைச் சேர்த்துத் தருவதாக உறுதி கூறியிருக்கிறார்கள்.

சிறுகனூர்

இவ்வூர் திராவிட இளைஞர் கழகத்தின் மாதாந்திரக் கூட்டம் 20-11-44-ந் தேதி தோழர் கா. ரா. ரெங்கசாமி ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது. மேற்படி கழகத்தின் ஆதரவில் பொது வாசகசாலை ஒன்று ஏற்படுத்தி வெளியூர் பிரமுகர்களைக் கொண்டு திறந்து வைப்பதென்றும், இக்கழகக் குழுவினர்களைக் கொண்டு விமலா அல்லது விதவையின் கண்ணீர், இரணியன் அல்லது இணையற்ற வீரன் ஆகிய நாடகங்களை பொங்கல் விழாவில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டு அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அரவக்குறிச்சி

பூ. ச. தண்டாயுதபாணி, ல. சேதுராமன் அவர்களின் "திராவிடர் இலவச வாசகசாலை"யின் முதலாவது ஆண்டு நிறைவு விழா 6-12-44-ல் தேசீகுடன், தோழர் சாபர் உசேன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் முத்துசாமி, சாந்தப்பன், சேது, காதர்மொய்தீன், பூ. ச. தண்டாயுதபாணி முதலியோர் திராவிடர் நிலை, வாசகசாலை என்பவைக் குறித்துப் பேசினர்.

சிவகங்கை

30-11-44-ஆந் தேதி தோழர் எஸ். ஆர். எம். வெங்கடாசலம் தலைமையில் திராவிடர் கழகக் கூட்டமொன்று நடைபெற்றது. தெ.இ.ந.உ. சங்கத்தைத் திராவிடர்கழகம் என்று பெயர்மாற்றி அமைக்கப்பட்டது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் வாரத் தாள்களை ஆரம்பித்து இயக்கக் கொள்கைகளைப் பரப்பும்படியும் சேலத்தில் தெரிவித்தபடி 10000 அங்கத்தினர்களுக்கு மேல் சேர்த்துவிட்டபடியால், தனி மாநாட்டை விரைவில் கூட்டும்படியும் பெரியாரைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி கழகத்திற்கு தோழர்கள் எஸ். ஆர். எம். வெங்கடாசலம் தலைவராகவும், வி. எஸ். எ. ஆர். சுப்ரமணியன் உபதலைவராகவும், க. இராஜசேகரன் (அட்வகேட்) செயலாளராகவும், எஸ். ச. மருதபாண்டியன் துணைச்செயலாளராகவும், இரா. இராமசுப்ரமணியன் (அட்வகேட்) பொருளாளராகவும், மற்றும் சிலர் நிர்வாகக் குழுவினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ராயபுரம்

சென்னை ராயபுரம் இரண்டாவது டிவிஷன் திராவிடர் கழகத்தின் ஆரம்ப விழா 30-11-44-ந் தேதி டாக்டர் இருதயநாதன் தலைமையில் நடந்தது. மேற்படி கழகத்திற்கு தோழர்கள் டாக்டர் இருதயநாதன் தலைவராகவும், கே. குப்புசாமி உபதலைவராகவும், ஆர். பொன்னையா காரியதரிசியாகவும், என். என். நாதன் பொருளாளராகவும், மற்றும் 11 பேர் நிர்வாகக் கழக உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

உதகை

நீலகிரி ஜில்லா உதகை திராவிட கழகத்தின் ஆதரவில் தோழர் பண்டிட் ஜெய்லானி தலைமையில் 11-12-44-ந் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் தூத்துக்குடி எம். ஒ. தங்கப்பமரைக்காயர், பாளையங்கோட்டை இபுராஹிம், கெ. ஐ. கரீம் ஆகியோர்கள் பேசினார்கள். தலைவர் முடிவுரையில் இந்நாட்டில் திராவிடஸ்தான், பாகிஸ்தான் என இரண்டு அரசாங்கங்கள் தான் இருக்கும் என்பதை விளக்கினார்.

பேராவூரணி

சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை ஒப்புக்கொண்டு இவ்வூரில் 14-12-44-ல் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு அடியிற்கண்ட உறுப்பினர்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் ஆர். வேலுக்கண்ணு, உபதலைவர் ஜெ. பி. பொன்னன், பொக்கிஷதார் ஆர். வேலுச்சாமி, காரியதரிசிகள் வி. எஸ். குழந்தை & வடிவேல்.

இளங்காடு

10-12-44-ந் தேதி இவ்வூர் திராவிடர் கழகத் தொடக்க விழா நடைபெற்றது. அன்று மாலை பெரியார் உருவப் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. திருச்சி தோழர் டி. வி. வேதாச்சலம் அவர்கள் தலைமையில் மேற்படி விழா ஆரம்பமாயிற்று. கரந்தை தோழர் அரங்கசாமி புலவர் கழகத்தின் அவசியத்தை விளக்கினார். கரந்தை மாணவர் குழந்தையா திராவிடக் கொடியை ஏற்றினார். தோழர்கள் திருவையாறு மாணவர் டி. ஆறுமுகம், பி. முத்துசாமி, குடந்தை எஸ். கே. சாமி முதலியவர்கள் விரிவுரையாற்றினார்கள். தோழர் ஜி. முருகையன் நன்றி கூறினார்.

மண்ணச்சநல்லூர்

15-12-44-ந் தேதி மண்ணச்சநல்லூர், புதுக்கோட்டை சகாயசித்தி கட்டிடத்தில் தோழர் எ. பெருமாள் பிள்ளை அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம், ஜனவரி மாத முதல் வாரத்தில் ஆண்டு விழா நடத்துவதென்றும், விழாவை நடத்திக் கொடுக்கத் தோழர்கள் சி.என். அண்ணாதுரை எம். ஏ., நெடுஞ்செழியன், ஜனார்த்தனம் முதலியவர்களை அழைப்பதென்றும், மண்ணச்சநல்லூர் பஞ்சாயத்து போர்டில் கட்டாய கல்வியை அமுலுக்குக் கொண்டுவந்து நடத்த தகுந்த முயற்சி செய்யவேண்டுமென்று போர்டாரை கேட்டுக் கொள்வதென்றும், இன்னும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

செவ்வாய்ப்பேட்டை

செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழக நிர்வாகத் தேர்தல் கூட்டம் 17-12-44 ஞாயிறு இரவு 9 மணிக்கு சுயமரியாதைச் சங்கத்தில் கழகத் தலைவர் தோழர் எஸ். எஸ். கோவிந்தனார் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. தோழர்கள் எஸ். ராசமாணிக்கம் தலைவராகவும், கே. கோபால் உபதலைவராகவும், ஆர். என். எ. ராசமாணிக்கம் பொருளாளராகவும், எம். எல். கந்தசாமி செயலாளராகவும், பி. எல். சங்கரன், பி. எஸ். வேலுசாமி ஆகியோர்கள் செயலாளர்களாகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கழகத்தின் 2-ஆம் ஆண்டு விழாவை தைத்திங்கள் முதலாவது வாரத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆண்டு விழாவிற்கு ஒரு கமிட்டித் தேர்தல் செய்யப்பட்டு அக்கமிட்டிக்குத் தோழர்கள் ஆர். எம். நவகோடி தலைவராகவும், கே. கே. மாகாதேவன், பி. என். பெருமாள் காரியதரிசிகளாகவும், எம். பி. நடராசன் விளம்பர அதிகாரியாகவும் ஏகமனதாகத் தேர்தல் செய்யப்பட்டனர்.

திராவிடர் இயக்கத்தில் தீவிர வாதி தோழர் சி. டி. நாயகம் இயக்க தோழர்கள் ஆர். ரங்கசாமி, எம். ரங்கசாமி ரவுத்து, அ. சிவசங்கர முதலியார் ஆகியோர் இயற்கை எய்தியமைக்கு அன்னார் குடும்பத்தார்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனைமலை

ஆனைமலை பிள்ளையார் சுவாமி கோவில் மடத்தில் 16-12-44ந் தேதி திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. அதுசமயம் தோழர் என். நரசிம்மன் பி. எ. அவர்கள் தலைமையில் அண்ணாஸாத் தலைவராகவும், எ. ஆர். கோவிந்தசாமி உபதலைவராகவும், எ. கே. முகம்மது அனீப் செயலாளராகவும், எஸ். நஞ்சப்பன் துணைச் செயலாளராகவும், எ. எம். வி. அப்துல் சப்பார் பொக்கிஷதாராகவும் 17-காரியக் கமிட்டி மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

கீவளூர்

29-12-44 மாலை 5 மணிக்கு தெற்கு வீதி (உபதலைவர்) டி. ராசய்யா இல்லத்தில் நிர்வாகக் கமிட்டி கூடும். மெம்பர்கள் இதனையே அழைப்பாகக் கருதி வரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர், எம். கே. பிச்சையா,
திராவிடர் கழகம், கீவளூர்.

ஈரோடு அத்தலட்டிக் சங்கத்தின் முதல் வருடாந்திர விளையாட்டு விழா 25-11-44-ஆம் தேதி கோவை கல்வி அதிகாரி தோழர் வி. வெ. ராமன்மேனன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

அடிமை விலங்கை அகற்ற வாரீர்!

(பொள்ளாச்சி N. சாவித்திரி)

உலக வரலாற்றினை உற்றுக் கவனித்தால், ஒவ்வொரு நாடும் எப்படி சுதந்திரமும், சுயேச்சையும், முன்னேற்றமும் சிறப்பும் அடைந்தன என்று விளங்கும். இங்கிலாந்திலே வசித்த மக்கள் பல நூற்றாண்டுகளுக்குமுன், கண்டதையெல்லாம் கடவுள்களாகவும், மோட்ச சாம்ராஜ்யத்திற்கு வழிகாட்டும் கருணைக் கடலாகவும் கருதி கண்ணிழந்த கபோதிகளாக மூடத்தனத்திலே மூழ்கிக்கிடந்தார்கள். முன்னேற வகையின்றி விழித்தார்கள். இங்கிலாந்து அந்த நிலைமையிலிருக்கும்பொழுது, திராவிடநாட்டில் திராவிட அரசர்கள் சிறப்புடனும், வீரத்துடனும் அரசாட்சி நடத்தினர். குடிகளும் சிறந்த நாகரிகத்துடன் உன்னத நிலைமையில் வாழ்க்கை நடத்தினர், புகழ்பெற்றிருந்தனர்.

இன்றைக்கு இங்கிலாந்தையும் திராவிட நாட்டையும் இணைத்துப் பாருங்கள். இங்கிலாந்தின் நிலைமை என்ன? திராவிடநாட்டின் நிலைமை என்ன? அந்தகாரத்தில் மூழ்கிக்கிடந்த அயல்நாடுகளெல்லாம் உன்னத நிலைமை அடையவும், சிறப்புற்றிருந்த திராவிடநாடு சீரழிந்து போகவுமான நிலைமை ஏற்படக் காரணம் என்ன என்று அறிவாளிகள் ஆராய்ந்து பார்க்கவேண்டாமா? இந்நாட்டிலே பிறந்தவர்கள் எனப்படுபவர்கள் சிந்திக்கவேண்டாமா?

ஆரியம் என்றைக்கு திராவிடநாட்டில் ஆட்சி செலுத்தத் தொடங்கிற்றோ, என்றைக்குப் பார்ப்பனியம் பரப்பப்பட்டு திராவிடநாட்டில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிற்றோ, அறிவுக்குப்பொருந்தாத, வாதத்திற்கு நில்லாத வேதசாஸ்திர இதிகாச புராண ஸ்மிருதி போன்றவைகளை என்றைக்கு திராவிடமக்கள் நம்பிபோற்றி வாழ்க்கை நடத்தத்துணிந்தார்களோ, அன்றையிலிருந்து திராவிட நாடு தன் பெருமைபெற்ற கலை, வாணிபம், அரசு எல்லாவற்றையும் இழந்துவிட்டது. கடலுக் கப்பாலுள்ள பல அயல் நாடுகளும் போற்றப்படும் முறையில் திராவிட நாடு அமைக்கப்படவேண்டுமானால் பார்ப்பனியம் எந்த வழிகளிலெல்லாம் நம்மைச் சுற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றதோ அந்த வழிகளையெல்லாம் தகர்த்தெறியவேண்டும்.

திராவிட நாட்டின் முன்னேற்றத்திற்காக, திராவிட மக்கள் சமத்துவத்துடன் வாழுவதற்காக ஆண்கள் மட்டும் முயற்சித்தால் முடியாது! பெண்கள் என்றால் இழிவாகக் கருதும் இழி தன்மையைக் கண்டதுண்டமாக்கி, திராவிட நாட்டுப் பிரிவினைப் புரட்சிப் போரிலே பெண்களாகிய நாம் துணிந்து முன்னணியில் நிற்கவேண்டும்! எனவே, திராவிட நாட்டுப் பிரிவினைப் போர் அணிவகுப்பில் சேருவதற்கு அறிகுறியாக திராவிடர் கழகத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து அடிமை விலங்கை அகற்ற வாரீர்! என்று அன்புடன் அழைக்கின்றேன். கூடுங்கள். முரசு கொட்டுங்கள். குடிஅரசை நாட்டுங்கள்.

இறுதிக் கடன்

திண்டிவனம் திராவிடர் கழக அமைச்சர் தோழர் அப்பாண்டநாதன் அவர்கள் தந்தையார் சம்பத்ராவ் நைனார் அவர்கள் இயற்கை யெய்தியதை முன்னிட்டு அடியாரது இல்லத்தில் தோழர் குலசேகரதாஸ் எம். எல். எ., (காங்கரஸ்) அவர்கள் தலைமையில் 11-12-44-ந் தேதி இறுதிக் கடன் நடைபெற்றது. தோழர்கள் எம். எல். பாண்டியன் பி. எ. (ஆனர்ஸ்) புலவர் வீர. அரங்கனார், க. இராமமூர்த்தி ஆகியவர்கள் நீத்தாருக்குக் கடன் உண்டா என்பது பற்றிப் பேசினார்கள். இயக்கப் பத்திரிகைகளுக்கு முறையே ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

"குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

4 அணா புத்தகங்கள்

இராமாயண ஆராய்ச்சி
" பால காண்டம்
" ஆரண்ய காண்டம்
" கிட்கிந்தா காண்டம்
பெண் ஏன் அடிமையானாள்? (ஈ-வெ-ரா)
பகுத்தறிவு அல்லது மரண சாஸனம் முதல் பாகம்
ஷை இரண்டாம் பாகம்
மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?
மதப்புரட்சி
வால்டையரின் வாழ்க்கைச் சரிதம்
விவசாய இந்தியா
விவாக விடுதலை
பரிணாமவாதம்
இந்தியமாதா
பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை
இங்கர்சால் பொன்மொழிகள்
ஜாதியை ஒழிக்கவழி (டாக்டர் அம்பத்கார் எழுதியது)
சோதிட ஆராய்ச்சி (ஈ. வெ. ரா.)
பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)
கடவுளும், பிரபஞ்சமும்
வள்ளுவர் குறளும் ஈ. வெ. ரா. வாழ்க்கையும்

கிடைக்குமிடம்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery Street, Erode.